# இரட்சணிய சரிதப் படலத்தில் கிறித்தவக் கோட்பாடுகள்

*முனைவர் அ. ஃபீபி ஸ்டெல்லா*
தமிழ்த்துறைத் தலைவர் (சுழற்சி - II)
மகளிர் கிறித்தவக் கல்லூரி, சென்னை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6482

எச். ஏ. கிருட்டிணப் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூல் ஜான் பனியன் (John Banyan) என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற “திருப்பயணியின் முன்னேற்றம்” (Pilgrims Progress) என்னும் நூலின் வழி நூலாகும். இந்நூல் ஆதிபருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பருவங்களையும் 3766 பாடல்களையும் கொண்டு அமைந்துள்ளது.

இரட்சணிய சரிதப் படலம் குமார பருவத்தில் இடம்பெற்றுள்ளது. “இரட்சணிய யாத்திரிகம்” என்னும் மீட்பு நெறிப் பயணக் காவியத்தில் சிறந்ததொரு பகுதியாகப் பாராட்டப்பட்டுப் பலராலும் கற்கப்படுவது குமாரபருவத்தில் வருகின்ற இரட்சணிய சரிதப் படலம் என்று கூறப்படுகிறது.

மீட்பு வழியில் எழில் மாளிகை என்னும் ஒரு விடுதியைச் சேர்ந்த பயணி அங்குக் களைப்புத் தீர்ந்து இளைப்பாறிய பின் விடுதியைச் சேர்ந்த யூகி, விவேகி, பக்தி, நேசம் எனப்படும் பெண்டிர் நால்வரும் பக்தி என்னும் பெண்மணி பயணி வேண்டிக்கொண்டதற்கேற்ப அவனுக்கு இயேசுபிரான் உற்ற சிலுவைப்பாடுகள், மரணம் மற்றும் அவர் உயிருற்றெழுந்த செய்தியைச் சொல்வதாக இரட்சணிய சரிதப் படலம் அமைந்துள்ளது.

இரட்சணிய சரிதப் படலம் 495 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. கிறித்துவ வாழ்வில் மிக முக்கியமானதாகக் கொள்ளப்படும் கிறித்து பெருமான் இவ்வுலகில் வாழ்ந்த கடைசி நான்கு நாட்களில் நடந்த நிகழ்ச்சிகள் இப்படலத்தில் இடம்பெற்றுள்ளன.

கம்பராமாயணத்தில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் “உலகம்” என்ற தொடக்கமுடையதாய் அமைந்ததோடு இறைவனது ஆக்கல், நிலை பெறுத்தல், நீக்கல் ஆகிய முத்தொழில்களை அவரது அலகிலா விளையாட்டுகளாய்க் குறிப்பிட்டு அத்தகைய இறைவனது திருவடிகளுக்குச் சரண் என இயம்புவதைப் போல இரட்சணிய சரிதப் படலத்தின் கடவுள் வாழ்த்து,

**“உலகம் மகிழ்ந்த தீடேறப் பரலோக வாசிகளுக்கு உவகையே”**

என்று தொடங்கி, அன்பினால் சிலுவை மீது ஏறிய மெய்ஞ்ஞான சூரியனாகிய கிறித்துபிரானின் திருவடிகளைச் சிந்தையில் கொண்டு

வாழ்த்துவோம் என்பதை,

**"சிலுவை மிசையேறிய மெய்ஞ்ஞான சூரியன் அடியைச்**
**சிந்தை செய்வோம்".**

என்ற அடிகளால் உணர்த்தி இரட்சணிய சரிதப் படலம் தொடங்குகிறது.

பக்தி என்னும் பெண் இரட்சணிய சரிதப் படலத்தின் கதையைச் சொல்லுமாறு ஆசிரியர் அமைத்துள்ளார். பக்தி என்னும் பெண் சொல்லுமாறு:

நம் பெருமானாகிய கிறித்து எருசலம் மாநகரில் தம்முடைய மாணாக்கர்கள் பன்னிருவரொடும் "கடப்புத் திருநாள்" விருந்தினை அருந்தினார். அந்த விருந்தில் அருந்திய அப்பம் தம்முடைய உடல் எனவும், திராட்சைப் பழச்சாறு தம்முடைய இரத்தம் எனவும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி (உலகம் எங்கும் உள்ள கிறித்தவப் பெருமக்களால் இன்றும் நினைந்து அருந்தப்படுகின்ற திருவிருந்தாக அதனை நியமனம் செய்து), பின்னர் தம் அடியார்களுடன் எருசலத்துக்கு வெளியில் இருந்த கெத்சமனே எனும் சோலைக்குச் சென்றார். அடியார்கள் ஊசியின்பின் செல்லும் நூலைப் போல அவர் பின்னே சென்று கொண்டிருந்தார்கள்.

அச்சோலையில் திருமைந்தனார் கிறித்து தனித்துச் சென்று உள்ளம் உடைந்து, தம் வியர்வைதானும் செந்நீர்த்துளிகளாகக் கசிந்திடத் தம் தந்தையாரை நோக்கிச் செபித்து எழுந்திடவும், (அவர்க்கு மாணாக்கனாக இருந்த) யூதாசு காரியோத்து தலைமை வகித்து நடத்திவரப் பகைவர் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டு, பெருமானைக் கட்டி, அப்போது தலைமைப் பூசாரியாக எருசலத்தில் வீற்றிருந்த காயிபா என்பவனுடைய அரண்மனைக்கு இழுத்துச் சென்றது. அந்த அரண்மனையில் "இவன் கடவுட் பழி பேசினான்" என்பதொரு பொய்க் குற்றத்தை அவர்மீது சுமத்தி, அதனால் வள்ளலைக் கொலைத்தீர்ப்புக்கு உட்படுத்திட வேண்டும் எனப் பகைவர் கொக்கரித்தனர்.

கலவரக்காரர்கள் அண்ணலை அடித்திழுத்து எருசலத்தின் நீதியாசனத்தில் வீற்றிருந்த ஆளுநன் பிலாத்து என்பவனுக்கு முன் நிறுத்தி அவர் மீது கொலைத் தண்டனைக்குரிய பொய்க்குற்றங்களைச் சுமத்தினார். பாம்புகள் போலச் சீறித் திரண்டெழுந்திருந்த கூட்டத்திற்கு அஞ்சியும், தன்னுடைய பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவும் பிலாத்து மாசற்ற மாமணியைச் சிலுவையில் அறைந்து கொலை செய்யப்படுவதற்கு ஒப்புக்கொடுத்துத் தன் கைகளைக் கழுவிக் கொண்டான்.

**"ஆர்கொலாம் இவன்!"**

மிக இழிவான எள்ளலுக்கு இரையாகி முதுகில் வாரினால் அடிப்பட்டு, சிலுவை எனும் சாவு மரம் தம் மீது சுமத்தப்பட, அதனைச் சுமந்துகொண்டு எருசலம் நகருக்கு அப்பாலிருந்த கல்வாரி எனும் கொலை மேட்டினை நோக்கி நடந்தார் நம் அருள் வள்ளல். "பொல்லாத பகைவர்களும் போர்ச் சேவகர் குழுவும் சொல்லாத நிந்தைமொழி சொல்லித் துணிந்து இயற்றும் பொல்லாங்கை யெல்லாம் நம் ஈசன் பொறுத்திருந்தார்". அவர் இவ்வுலகம் அழிந்து போகுமே என்று நினைந்தவராய்க் கொலைக்குன்றம் நோக்கிச் சென்றார்.

**"காசினி நோக்கினார் கல்வாரி நோக்கினார்!"**

பெருங் கொலைகள் செய்த குற்றவாளிகள் இருவர் சிலுவையில் அறையப்பட அவர்கள் நடுவில் தம் திருக்கரங்களில் ஆணிகள் கடாவப்பட்டவராக சிலுவையில் உயர்த்தப் பட்டார் தேவமைந்தன். "தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி பன்னரிய பலபாடு படும்போதும், பரிந்து எந்தாய் இவர் பிழையை மன்னியும் என்று வாய் மலர்ந்தார் நம் அருள் வள்ளல்". அச்சமயம் உலகினை இருள் கவிழ்ந்தது, மலைகள் வெடித்தன, தேவாலயத்தின் திரை கிழிந்தது. இறுதியில் பெருமான் தம் ஆவியைத் தந்தையாரிடம் ஒப்புவித்து "மரணத்தில் ஒடுங்கினார்". இவற்றைக் காணப் பொறாமல் பகலவன் மேற்றிசையில் குப்புற விழுந்தான். அவருடைய சடலம் ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

இது நடந்தது வெள்ளியன்று. சனி இரவு கடந்து விடிந்து வரும் வேளையில், அன்றலர்ந்த மலர்களில் தேனை உண்ட வண்டுகள் பள்ளி யெழுச்சி பாட, எம்பெருமான் உறக்கத்திலிருந்து எழுவதைப்போல உயிர்த்தெழுந்து கல்லறைக்கு வெளியே வந்தார். வானோர் வாழ்த்தி பூ மழை யாண்டும் இருள் நீங்கி மெய்யறிவு தழைத்தது.

இயேசு தாம் உயிருற்றெழுந்த நாற்பதாம் நாளன்று தம்முடைய மாணாக்கர்களுடன் எருசலைக்கு அப்பாலிருந்த ஒலிவ மலைக்குச் சென்று, அவர்கள் கண்முன் மேகம் தம்மை மறைத்திட விண்ணுயர்ந்து சென்றார் என்று இரட்சணிய சரிதப்படலத்தின் கதை சொல்லப்படுகிறது.

இறைவனது திருவருளுக்கு ஆட்பட்ட இரட்சணிய யாத்திரிகப் புலவர் கிருட்டிணப் பிள்ளை கிறித்தவக் கோட்பாடுகளைத் தெளிவாக எல்லாரும் அறிந்து கொள்ளும் முறையில் இரட்சணிய சரிதப் படலத்தில் மிக விரிவாகக் கூறியுள்ளார்.

## கிறித்தவக் கோட்பாடுகள்

“கிறித்துவக் கோட்பாடுகளைச் சுருக்கமாக அப்போஸ்தலரது விசுவாசப் பிரமாணத்தில் (Apostle’s Creed) அடக்கலாம். மேலும் கிறித்தவத் திருச்சபையின் வழிபாடு முறையில் தனது சமய கோட்பாடுகளாகப் பின்பற்றும் மோசேயின் நியாயப்பிரமாணம், திருமுழுக்கு (Baptism) திருவிருந்து (Holy Communion) என்ற திருச்சாதனங்கள் (Sacrements) கிறித்துக்கற்றுக் கொடுத்த இறை வழிபாடு ஆகியவையும் உள்ளடக்கியதாகும். இவை கிறித்தவத் திருச்சபை வாழ்வில் ஒவ்வொரு கிறித்தவனும் தவறாது பின்பற்றி வரும் நெறிமுறைகள்” என்று கூறப்படுகிறது.

## கிறித்து கற்றுக் கொடுத்த இறை வழிபாடு

“பரமண்டலங்களிலுள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் எங்களுக்கு விரோதமாய் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச்சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராஜ்யமும், வல்லமையும், மகிமையும், என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென்” என்று கிறித்துவினால் கற்றுக் கொடுக்கப்பட்ட இப்பிரார்த்தனையில் அவரது உபதேசங்களும், வாழ்க்கையும் அடங்கியுள்ளன. இவ்விறை வழிபாட்டின் வழியாய் இறைவன் பிதாவாகவும், தூய்மையானவராகவும், வல்லமை பொருந்தியவராகவும், மனுக்குலத்தைக் காக்கின்றவராகவும் உள்ளார் என அறியலாம். மன்னிப்பின் இயல்பு கடவுளுடையது என்றும், வழிநடத்துகின்றவர் அவரென்றும் சுட்டப்படுகின்றது.

“இராம காவியத்தில் அவதார நோக்கம் போரின் மூலம் நிறைவேறுகிறது. இயேசு காவியத்தில் அவதார நோக்கம் பாடுகளின் மூலம் நிறைவேறுகிறது” என சொல்லப்பட்டிருந்த தற்கேற்ப இரட்சணிய சரிதப் படலம் முழுவதுமே இயேசு உலகத்திற்காக மேற்கொண்ட மீட்பு வேலையின் வரலாற்றை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. உலக மக்கள் மகிழ்ந்து ஈடேற்றம் அடைந்திடவும், வானுலகில் வாழ்பவர்களுக்கு மகிழ்ச்சி மிகுந்திடவும் அன்பர்கள் நல்ல வழியிலே நடந்திடவும்,

> ***“சிலுவை மிசையேறிய மெய்ஞ்ஞான சூரியன்” (பாடல்-2)***

என படலத்தின் தொடக்கத்திலே கிறித்தவ பெருமானின் பிறப்பின் நோக்கம் உணர்த்தப்படுகிறது.

கிறித்து பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியாகவும் விளங்குகின்றார். அவராலேயல்லாமல் இரட்சிப்பு இல்லை. அவரை மனம், வாக்கு, செயல் என்ற மூன்றாலும் விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்

படுவான். கிறித்துவின் அன்பே, அருளே மனித குலத்தை மீட்கும். இத்தகைய கிறித்தவ சமய நம்பிக்கைகளைக் கொண்டது கிறித்துவத் திருச்சபை. அந்த நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதே அப்போஸ்தலரது விசுவாசப் பிரமாணம். கிறித்தவ நம்பிக்கை பற்றிய உறுதி மொழியே விசுவாசப் பிரமாணம் என்று சொல்லப்படுகிறது.

**"பரசமய விருளகலச் சுவிசேட விரிகிரணம் பரப்பி நின்ற**
**இரவியெனுந் திருச்சபையில் நிலையாக வழங்கிவரும் இரண்டுஞான**
**வரமிகுசாக் கிரமெந்தின் முன்னதுஞா னஸ்நானம்; மற்றென் றிந்தப்**
**பரமவிருந்த தாம்; நாம் பரமகுரு வேயிலையேற் படுத்தி னாரே"**

***(பாடல் -51)***

என்ற பாடல் திருச்சபை பின்பற்றுகின்ற இரண்டு திருச்சாதனங்களான திருமுழுக்கு (Baptism) திருவிருந்து (Holy Communion) பற்றிக் கூறுகின்றது.

## திருவிருந்து

இயேசு மனுகுலத்தின் இரட்சிப்பு வேண்டி, தான் அடையப் போகின்ற துன்பங்களைப் பொருட்படுத்தாது முன்னிரவுப் பொழுதில் தம் பன்னிரண்டு சீடர்களுக்கு ஒரு வீட்டில் திருவிருந்து செய்தார். தம் கையினால் அப்பத்தை எடுத்து அதைப்பிட்டு நன்றி செலுத்திச் சீடர்களுக்குக் கொடுத்து அது அவர்களுக்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படும் தமது சரீரம் தம்மை நினைவு கூறும்படி உண்ணுங்கள் எனக் கூறி சுவையுள்ள திராட்சை இரசத்தை எடுத்து அதை ஆசீர்வதித்து, அனைவரும் குடியுங்கள் என்று கூறி, அது தமது புதிய உடன்படிக்கைக்காகச் சிந்தப்படும் தம்முடைய இரத்தமாக இருக்கின்றதென்றும், பாவமன்னிப்பு அதனால் உண்டாகுமென்றும், தமது பிதாவாகிய தேவனுடைய வீட்டில் அனைவரும் வந்து சேரும் வரைத்தாம் அதைப் பானம் பண்ணுவதில்லை என்று கூறிய கருத்துக்களை,

**பொங்குபர மானந்த நமக்கருள வந்தமனுப் புதல்வர் தாமே**
**வெங்கரத்தால் அப்பமெடுத் ததைப்பிட்டுத் தோத்திரித்துச் சீடர்க் கீந்தீ**
**துங்களுக்காய் மரணத்துக் கொப்புவிக்கும் எனதுடல் தென்னை யுன்னித்**
**தங்கிடுநீ ரிந்தவகை இயற்றியெனக் கருணையொடு சாற்றிப் பின்னும்".**
**"இனிமைதரு பழரசபாத் திரமேந்தி துதிசெலுத்தி யதிலே நீங்கள்**
**அனைவீரும் பருகுமற் நிதிபுதிய வுடம் படிக்கைக் கமையச் சிந்தும்**
**எனதிரத்தம் பாவமன்னிப் பிதனாலே யுண்டாகு மினியிப் பானந்**
**தனைநுகரேன் என்பரம தந்தையிராச் சியந்தனிநீர் சாறரு மட்டும்"**

***(பாடல் -48,49)***

என்ற பாடல்கள் உணர்த்துகின்றன.

## திருமுழுக்கு

திருமுழுக்குப் பெற்றவர்கள் நம்முடைய பாவத்தைச் சுமந்து தமது உயிரையும் விட்ட இறைவனைமனதில்தியானித்து, சிந்தையின் பால் நைந்திருகி, விசுவாசத்தில் ஊன்றி நிற்க நற்கருணையைப் பயபக்தியுடன் உட்கொள்ள வேண்டும் என்பதனை,

**முந்துறஞா னஸ்நானம் அடைவர்திருச் சபைபுகுவோர் முறையி னின்று**
**பந்தமனு காதபரா பரன்மதலை எம்முடைய பாவந் தாங்கிச்**
**சிந்தினர்செங் குருதியுயிர் விடுத்தனரென்(று) உளநினைந்து சிந்தை யன்பால்**
**நைந்துருகி விசுவாசத் தூன்றிநிற்பர் நற்கருணை நயந்துட் கொள்ளில்"**

***(பாடல் -52)***

என்ற பாடலின் வாயிலாக உணர்த்துகின்றார்.

தம் உடலை ஆணிகள் கிழித்து துன்பப்படுத்திய பொழுதிலும் பகைவர்களுக்காகப் பிதாவினிடத்தில் மன்றாடிய செயலே கிறித்து உலகினுக்கு ஓர் இரட்சகர் என எடுத்துரைக்கின்றது. இவ்வுண்மையை உணர்த்தும் விதமாக,

***"கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்து ருவி வதைப்புண்டு***
***மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி***
***ஈண்டிவரே யுலகினுக்கோ திரட்சகரென் றெடுத்துரைக்கும்;***
***வேண்டுமோயினிச்சான்று மிதைவிடுத்து வேறொன்றே"***

***(பாடல்-344)***

என்ற பாடலில் அமைந்துள்ளது.

எவன் ஒருவன் தன்னைக் கொடிய பாவி என்றுணர்ந்து மனம் மிகக் கசந்து துயருறுகின்றானோ, அவன் கிறித்து பெருமானிடத்து, மெய்யான அன்பு கூர்ந்து, அவரை உறுதியாகப் பற்றிக் கொண்டால், அவனுக்கு அது வாய்த்திடும் என்பதை,

***"அவன் கிறிஸ்து வில்மெய்யன்பு கூர்ந்துவிசு வாசம் வைத்திடில டுக்குமே"***

***(பாடல் -71)***

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

### சிலுவை பாடுகள்

சிலுவை பாடுகள் பற்றிக் கூற கிருட்டிணப் பிள்ளை இரட்சணிய சரிதப் படலம் முழுமையும் பயன்படுத்தியுள்ளார். இப்படலத்தின் 495 பாடல்களும் இதனை விளக்குகின்றன. ஆசிரியருக்குச் சிலுவைப் பாடுகளின் பாலுள்ள ஈடுபாடும் பற்றுள்ளமும் இப்படலத்தின் வாயிலாக தெளிவாக விளங்கும். சிலுவைப் பாடுகளின் சிறப்புச் செய்தியாக,

***"தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்***
***பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்***
***இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை***
***மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்"***

***(பாடல் -342)***

என்ற பாடலைத் தந்து இயேசுவின் சிறப்பைக் காட்டுகிறார். ஆண்டவரின் திருப்பாடுகளை அவர் குருசில் உயிர்விடுவது வரையில் நிகழ்வனவற்றை 279 பாடல்களில் பாடியுள்ளார்.

### உயிருற்றெழுதல்

கிறித்துவின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் கிறித்துவ சமயமே இல்லை எனலாம். கிறித்து சிலுவையில் அறையப்பட்ட மூன்றாம் நாள் காலையில் தாம் கூறிய வண்ணமே உயிர்த்தெழுந்தார் என்பதை,

***"இன்னதோர் ரமையந் தன்னி லிருநிலவுக்குக் கெல்லாம்***
***பன்னரு நலத்த வாய பரகதிப் பயனை யீட்டித்***
***துன்னிய சடவி யோகத் துயிலுணர் சூழ்ச்சி யேபோல்***
***உன்னத தேவமைந்த னுயிர்த்தெழுந்த தருளிப் போந்தார்"***

***(பாடல் -433)***

என்ற பாடல் உணர்த்துகின்றது.

மனிதர்கள் இறைவனிடத்து அன்பு செலுத்தினால் அவரைச் சென்றடைய முடியும் என்ற கிறித்துவ அன்பு நெறியாம் பக்தி நெறியை இரட்சணிய சரிதப் படலம் கூறுகின்றது.

இவ்வாறாக திருமுழுக்கு, நியாயப்பிரமாணம், திருவிருந்து, திருச்சபையின் வழிபாட்டு முறைகள் என கிறித்தவன் தவறாது பின்பற்றி வரும் நெறிமுறைகளான கிறித்தவக் கோட்பாடுகள் இரட்சணிய சரிதப் படலத்தில் உணர்த்தப்படுகின்றன.

### துணை நின்ற நூல்கள்

1. இரட்சணிய சரிதப் படலம் - சத்திய சாட்சி. பொ. ஆ., கிறித்தவ இலக்கிய
2. சங்கம், சென்னை.முதற்பதிப்பு-1998.
3. இரட்சணிய யாத்திரிகத்தில் கிறித்தவக் கோட்பாடுகள் - ப.ச. ஏசுதாசன்.க., சுதா பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு-1981.
4. கிறித்தவத் திருமறை, புதிய ஏற்பாடு